1971 ஜூலை 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்தியானம் வைத்துக்கொள்வது பற்றி ஆட்சேபணை இல்லை. மத்தியானம் வைத்தாலும் யாரும் வருவதில்லை. பார்ட்டி வேறு இன்று இருக்கிறது. 50 நிமிடத்தில் சொல்லக்கூடிய கருத்தை 5 நிமிடத்திலும் சொல்லலாம்.

திரு. சே. டி. கே. தங்கமணி: இந்தக் கோரிக்கைக்காக நாம் ஒரு நாள் ஒதுக்கினோம். ஆனால் இன்றைய தினம் இப்போதே மணி 12 ஆகப்போகிறது. இதற்காக இரண்டரை மணி, 3 மணியாவது இருந்தால் முடித்துவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உறுப்பினர் ஐந்து நிமிடத்திற்கு மேல் போகாமல் விவாதம் நடந்துகொண்டே போனால் கூட முடித்துவிடலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் இதற்காக 3 மணி நேரம் ஒதுக்குவது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை இரண்டு பேர்கள்தான் பெயர் கொடுத்திருக்கிறார்கள். திரு. கே. எம். எஸ். ஒருவரும், திருமதி அம்மையார் அவர்களும்தான். ஆகவே இவர்கள் வேண்டுமானால் பத்து நிமிடங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன் இந்த மானியக் கோரிக்கை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதைச் சட்டமன்ற நிகழ்ச்சிக் குறிப்பில் பதிவு செய்யுமாறு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, with the limited time available, I am going to speak on only two points relating to my constituency. One relates to the most backward Harijans among the Harijans and the second relates to dhobis who are not included in the Scheduled Castes. Many industrial developments are taking place in this country which will deprive the Harijans of their normal traditional work. For example, they are very good basket-makers but now basket making is dying out and many Harijans have become unemployed because of the new basket and other things that are produced by the various industries.

Also in my constituency there are many cobblers who have been driven out of their business by the big shoe industries. The only thing that is left to the cobblers is repairs and that too crude repairs. Now, even these repairs are attended by the big shoe industries. Consequently many cobblers are suffering. Of course, the Government are giving loans to them but what is really happening? They are not able to utilise the loans and start their work immediately.

@ 125–141-ம் பக்கங்களில் 4-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது